கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 14/2022

வாதி தரப்பு சாட்சி -1 நாரயணதாஸ் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 20.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் வாதி டிரஸ்ட் மட்டுமல்லாமல் கன்சான்தாஸ், நாரயணதாஸ், பிரைவேட் பேமிலி டிரஸ்ட் எஸ்டேட், ஆகியவற்றையும் நிர்வாகம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நானும் மேற்படி டிரஸ்ட்களில் ஒரு வாரிசு ஆவேன். வாதி டிரஸ்ட் மற்றும் இதர டிரஸ்ட்களும் கோபால் தாஸ் தூவரகதாஸ் பேமிலி டிரஸ்ட் எஸ்டேடின் உப டிரஸ்ட் என்றால் சரிதான். மேற்படி டிரஸ்ட்களில் தாவா சொத்துக்கள் மட்டுமல்லாமல் வேறு சில விவசாய நிலங்கள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி டிரஸ்ட்க்கு பாத்தியப்பட்ட மற்ற நிலங்களுக்கு உண்டான குத்தகை வசூல் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்துக்கள் தவிர பிற நிலங்களின் குத்தகை தொகை ஒவ்வொரு நிலத்திற்கும் வேறுபடும் என்றால் சரிதான். அதன் விவரம் எனக்கு தெரியாது. குத்தகை தொகை சுமாராக ரூ.2000 க்குள் இருக்கும் என்றால் அது பற்றி தெரியாது.

2. தாவா நிலத்திற்கு பக்கத்தில் வீரவள்ளியை சேர்ந்த அதியமான் என்பவருக்கு வாதி டிரஸ்ட்டால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அதன் வருட குத்தகை விவரமும் தெரியாது. கன்சான்தாஸ், நாரயணதாஸ் டிரஸ்ட்டின் வருட குத்தகை எவ்வளவு என்றால் அது பற்றி தெரியாது. குத்தகை பதிவேடு என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. வாதி டிரஸ்ட் குத்தகை பதிவேடு உள்ளதா என்றால் முதலில் இருந்தது. தற்போது இல்லை. முதலில் இருந்த பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தாவா சொத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். மேற்படி தாவா சொத்திற்கும் கிராம குடியிருப்புகள் இருக்கும் இடத்திற்கும் 3 கீ.மீ தொலைவு இருக்குமா என்றால் 2 கீ.மீ தொலைவு இருக்கும். தாவா நிலத்தின் பாசன வசதி மற்றும் வடிகால் வசதி பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எந்த வாய்க்கால் மூலமாக தாவா சொத்தில் பாசனம் செய்யப்படுகிறது என்றால் சரியாக நினைவில்லை.

3. வாய்க்காலுக்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் சரியாக தெரியாது. தாவா சொத்திற்கான பாசன வாய்க்கால் மற்ற விவசாய நிலங்களிலிருந்து 1 கீ.மீ தள்ளி உள்ளது என்றால் அருகில் தான் உள்ளது. தூரம் குறித்து சரியாக தெரியவில்லை. மேற்படி வாய்க்காலிருந்து தாவா நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச 1 கீ.மீ தள்ளி தான் நீரை கொண்டு வரவேண்டும் என்றால் சரியல்ல. கோடை காலத்தில் வாய்க்காலில் நீர் இல்லாத சமயத்தில் நீர் பாய்ச்சி விவசாயம் செய்வது சிரமம் என்றால் சரியல்ல. தற்போதைய காலத்தில் வாய்க்காலில் தண்ணீர் 3 முதல் 4 மாதங்கள் மட்டும் தான் தண்ணீர் வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஒட்டி வடக்கு பகுதியில் வடிகால் வாய்க்கால் உள்ளதா என்றால் உள்ளது. தாவா நிலம் மற்றும் தாவா நிலத்திற்கு மேற்பகுதியில் உள்ள நீர் அனைத்தும் மேற்படி வடிகால் வாய்க்காலில் தான் வடியும் என்றால் சரிதான். மழைக்காலத்தில் வடிகால் வாய்க்காலில் வெள்ளப் பெருக்கு காரணமாக மழைநீர் தேங்கி தாவா சொத்தில் மகசூல் பாதிக்கப்படும் என்றால் சரியல்ல.

4. வறட்சி காலத்தில் தண்ணீர் பாய்ச்சவும், மழைக்காலத்தில் வெள்ள நீரை வடிக்கவும் சிரமாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி காரணங்களால் விவசாயம் மற்றும் மகசூல் பாதித்து பொருளாதார இழப்பீடு ஏற்படுகிறது என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள வகையில் நெல் மட்டுமே பயிரிட வேண்டும் என்று எனக்கும் பிரதிவாதிக்கும் எவ்வித குறிப்பிட்டு எந்த ஒப்பந்தமும இல்லை என்றால் சரியல்ல. 25 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டது. தற்போது பிரதிவாதி அதில் வாழை மற்றும் பிற பயிர்களை செய்து எனது நிலத்தின் மண் வளத்தை பாதிப்பு அடைய செய்துவிட்டார். நான் சொல்வது போல குறிப்பிட்ட ஒப்பந்தமும் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சூழ்நிலை தகுந்தாற்போல எந்தவித விவசாயமும் செய்து கொள்ளலாம் என பிரதிவாதிக்கு வாய்மொழியாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.121/2006 ன் தீர்ப்பின் படி ஏக்கருக்கு ரூ.4000/- குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலம் எங்கு உள்ளது எ ன எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கான தன்மையும், தாவா சொத்திற்கான தன்மையும் வேறு வேறு என்றால் இருக்கலாம்.

5. அசல் வழக்கு 121/2006 வழக்கில் கண்டுள்ள நிலத்திற்கான பாசன வாய்க்கால், வடிகால் வாய்க்கால் வசதியும் தாவா சொத்தில் உள்ள வசதியும் வெவ்வேறானவை

என்றால் இருக்கலாம். அசல் வழக்கு 121/2006 வழக்கில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படும் குத்தகை தொகை பொய்யானது என்றால் சரியல்ல. மேற்படி குத்தகை நிலங்கள் அனைத்தும் வேறு வேறு கிராமங்களை சேர்ந்தது என்றால் இருக்கலாம். வா.சா.,1 வாக்குமூலத்தில் பத்தி 4 ல் சொல்லியுள்ள நிலங்கள் வேறு கிராமத்தை சேர்ந்தது என்றும், தாவா சொத்தின் கிராமத்தை சேர்ந்தது அல்ல என்றால் இருக்கலாம். தாவா நிலத்தை பிரதிவாதிகள் சொந்த செலவில் போர்வெல் அமைத்து தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் ச ரியல்ல. பிரதிவாதிகள் தவறாமல் குத்தகை தொகையை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவ்வவ்போது காலதாமதமாக தருகிறார்கள். சமீபகாலமாக நான் வேண்டும் என்றே பிரதிவாதிகளிடமிருந்து நிலத்தை வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒப்புக் கொண்ட குத்தகையை வாங்க மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

6. தாவா நிலத்திற்குஒப்பு கொண்ட குத்தகை 1 செண்டிற்கு ரூ.12 என்றால் அது 25 வருடங்களுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. எனது வழக்குரையில் ரூ.20 என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியும் அவரது குடும்பமும் நீண்ட காலமாக தாவா சொத்தில் தனது குடும்ப முயற்சியில் விவசாயம் செய்து ஜீவனம் செய்து வருகிாறர்கள் என்றால் அது பற்றி தெரியாது. பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்தை ஏதேனும் ஒரு வகையில் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வற்கு முன்பு பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற சட்ட விரோதமாக முயற்சித்தேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/-R.தமிழரசி**

**Additional District Munsif,**
**Kulithalai.**